Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. Crl.M.P.No.37/2026

Witness for Prosecution : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | மாதன் | Taluk : | |
| Father's / Husband Name | சுப்பிரமணி | Calling : | |
| Village | வாடமங்கலம் | Age : | 57 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 26.03.2026

**<u>புகார்தாரர் தரப்பு சாட்சி வாக்குமூலம்</u> :**

என் தங்கை கிருஷ்ணவேணி மற்றும் அவரது மகன் வெங்கடேசன் வாடமங்கலத்தில் 2 ஏக்கர் 16 செண்ட் நிலம் வாங்கினார். 39,50,000/- ரூபாய்க்கு வாங்கினார். முருசேகன், சாந்தி ஆகியோர் நிலத்துக்காரர்கள். நிலத்தை விற்பனை செய்ய பேசினார்கள், பின்பு வங்கியில் கடன் இருப்பதாக கூறி கிருஷ்ணவேணியிடம் 15,00,000/- லட்சரூபாய் கேட்டு கிருஷ்ணவேணி மற்றும் அவரது மகன் வெங்கடேசன் என்பவர் முருகேசன், சாந்தி ஆகியோரிடம் கொடுத்தார். மீண்டும் 5 லட்சரூபாய் கொடுத்தார். மீண்டும் 5 லட்ச ரூபாய் கொடுத்தார்கள். மறுபடியும் 3 லட்ச ரூபாய் கொத்தார்கள். மீண்டும் 2 லட்சம், 1 லட்சம் என்று மொத்தமாக 31 லட்ச ரூபாய் கொடுத்தார்கள். கிரையம் செய்ய பதிவாளர் அலுவலத்திற்கு சென்றோம், அன்றைய தினம் 3 லட்ச ரூபாய் முருசேகன் வங்கி கணக்கில் வெங்கடேசன் கொடுத்தார். கையில் 20 ஆயிரம் ரூபாய் கொடுத்தார். அன்றைய தினம் பதிவாகவில்லை. 10 நாட்கள் கழித்து முருசேகனும், சாந்தியும் சேர்ந்து செல்வராஜ் என்பவருக்கு விற்பனை செய்தார்கள். பலமுறை சென்று கேட்டும் பணத்தையும் தரவில்லை, நிலத்தையும் தரவில்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

Sd/-D.Saravanan, B.A.,B.L..,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)